# முக்கிய விதிகளின் சுருக்கம்*

HSBC Premier

## துரித தகவல்கள்

### முக்கிய விதிகள்

| | | மேலதிக தகவல்களுக்கு |
|---|---|---|
| தகுதி நிபந்தனைகள் | • HSBC Premier திட்டத்திற்குத் தகுதி பெற, நீங்கள் இ.ரூ. 7.5 மில்லியனை மொத்த உறவு மீதியாகப் பேண வேண்டும். | மேலதிக தகவல்களுக்கு<br>HSBC வரவேற்பு விபரக்கொத்து<br>வங்கியின் விதிப்பனவு வழிகாட்டி |
| கணக்கின் சிறப்பம்சங்கள் | • ஒருங்கிணைக்கப்பட்ட கணக்குகளில் இலங்கை ரூபாய் (LKR)/வெளிநாட்டு நாணய (FCY) சேமிப்பு மற்றும் கால வைப்புக் கணக்குகள், LKR நடைமுறைக் கணக்கு, தனிக் கணக்கு இலக்கத்தில் செயற்படுத்தப்படும் விசேட வெளிநாட்டு முதலீட்டு வைப்புக் கணக்கு (SFIDA) என்பன உள்ளடங்கும்.<br>• HSBC பிரிமியர் மற்றும் நீங்கள் HSBCஇல் வைத்திருக்கும் வேறேதும் கணக்குகள் தொடர்பான சகல நிதித் திட்டங்களையும் உள்ளடக்கிய ஒருங்கிணைவான விபரக்கூற்று வழங்கப்படும்.<br>• HSBC பிரிமியர் ATM கார்ட்/டெபிற் கார்ட், காசோசலைப் புத்தகம் என்பன வழங்கப்படும். | |
| நன்மைகள் | **நீங்களும் உங்கள் செல்வமும்**<br>• பிரத்தியேகமான பிரிமியர் உறவு முகாமையாளர்.<br>**உங்கள் அன்றாட வங்கிச் சேவை**<br>• வைப்புக்கள், வெளிநாட்டு நாணய வணிகம் மற்றும் கடன்களுக்கு முன்னுரிமை வட்டி வீதங்களும் கடன் வசதியும்.<br>• பிரிமியர் நிலையங்கள் மற்றும் 24/7 HSBC பிரிமியர் அழைப்பு நிலையம், தொலைபேசி வங்கிச் சேவை மற்றும் தனிப்பட்ட இணையத்தள வங்கிச் சேவை வசதிகளைப் பயன்படுத்தும் பிரத்தியேக வாய்ப்பு.<br>• முன்கூட்டியே அங்கீகரிக்கப்பட்ட பிரிமியர் மாஸ்டர்கார்ட் கிறெடிட் கார்ட்.<br>**நீங்களும் உங்கள் குடும்பமும்**<br>• உங்கள் முழுக் குடும்பத்திற்கும் உலகளாவிய அவசர உதவிச் சேவை.<br>• சிறுவருக்கான இலவச ATM அட்டை/அங்கீகார அட்டை சகிதம் பிரத்தியேகமான HSBC பிரிமியர் சேமிப்புக் கணக்கு.<br>**உலகெங்கிலும் உங்கள் வங்கி**<br>• ஒன்றில் பிரிமியர் எனின், அனைத்திலும் பிரிமியர் - அந்தந்த நாட்டுக்குரிய மேலதிக TRB தேவைகளைப் பூர்த்தி செய்யாமலே வெளிநாடுகளில HSBC பிரிமியரில் சேரலாம்.<br>• குளோபல் வியூ மற்றும் குளோபல் ட்ரான்ஸ்பர் மூலம் இலவசமான சொந்தப் பெயர் கணக்கு மாற்றம்.<br>• HSBC குழும ATM வலையமைப்பின்[2] மூலம் இலவச[1] பண மீளப்பெறுகை.<br>• அவசர பணமாக்கல் சேவை மற்றும் உலகளாவிய அவசர ஹொட்லைன் உதவி. | |

### நிதி அம்சங்கள்

| | | |
|---|---|---|
| கீழ் மீதிக் கட்டணம் | • உங்கள் **இ.ரூ.7.5 மில்லியனுக்கு கீழெனின், மாதாந்தக் கட்டணம் இ.ரூ. 3,000.** | • வங்கியின் விதிப்பனவு வழிகாட்டி<br>• தனித்தனி வசதிக்கான தகவல் தாள்<br>• HSBC இணையத்தளம் |
| கிறெடிட் கார்ட் கட்டணம் | • HSBC பிரிமியர் பிரதான மற்றும் மேலதிக மாஸ்டர்கார்ட் கிறெடிட் கார்ட்களுக்கு வருடாந்தக் கட்டணம் தள்ளுபடி.<br>• தொலைந்த கார்ட்டின் பதிலீட்டுக் கார்ட்டிற்கான கட்டணம் தள்ளுபடி. | |
| ATM பண மீளப்பெறுகைக் கட்டணம் | • HSBC பிரிமியர் ATM கார்ட் மற்றும் HSBC பிரிமியர் மாஸ்டர்கார்ட் கிறெடிட் கார்ட்டை பயன்படுத்தி, HSBC குழும ATM வலையமைப்பின்[2] ஊடாக மேற்கொள்ளப்படும் பண மீளப்பெறுகைக்கு கொடுக்கல் வாங்கல் கட்டணம் தள்ளுபடி. | |
| ஏனைய கட்டணங்கள் | • உலகளாவிய பணப் பரிமாற்ற மற்றும் அவசர பணமாக்கல் கட்டணங்கள் தள்ளுபடி.<br>• குறிப்பிட்ட சில வங்கிச் சேவைகளுக்கு கட்டணத் தள்ளுபடிகள் அல்லது சலுகைகள் வழங்கப்படும். விபரங்களை அறிய, HSBC பிரிமியர் இணையத்தளத்திலும HSBC கிளைகளிலும் பெறக்கூடிய "Banking Tariff Guide for HSBC Retail Banking and Wealth Management Customers" என்ப பிரசுரத்தைப் பார்க்கவும். | |

குறிப்புக்கள்:
1. வெளிநாடுகளிலுள்ள உள்நாட்டு வங்கிகளின் மேலதிக கட்டணங்கள் அறவிடப்படலாம் (பொருத்தமெனின்).
2. UnionPay ATM chip கார்ட் மூலம், ஆர்ஜென்டீனா, பிறேஸில், பிரான்ஸ், கிரேக்கம், மோல்டா, மெக்ஸிக்கோ, நியூசிலாந்து மற்றும் துருக்கி தவிர்ந்த நாடுகளில் உலகளாவிய HSBC ATMகளுடன் தொடர்பினை ஏற்படுத்தலாம்.

# முக்கிய விதிகளின் சுருக்கம்*

## துரித தகவல்கள்

| முக்கிய விதிகள் | | மேலதிக தகவல்களுக்கு |
|---|---|---|
| **HSBC பிரிமியருக்கான தகுதி நிபந்தனைகள்** | • நீங்கள் HSBC பிரிமியா சிறப்புரிமைகளையும் நன்மைகளையும் அனுபவிக்க வேண்டுமாயின், அதற்கான தகுதி நிபந்தனைகளையும் HSBC பிரிமியருக்கான பொருத்தமுள்ள ஏனைய விதிகள் மற்றும் நிபந்தனைகளையும் பூர்த்தி செய்ய வேண்டும். | ஒருங்கிணைந்த கணக்கு விதிகள் மற்றும் நிபந்தனைகள் ("T&Cs") |
| **படிநிலைகள்** | • வெவ்வேறு சிறப்புரிமைகளைக் கொண்ட படிநிலைகளை நாம் ஏற்படுத்தக்கூடும்.<br>• உங்கள் வேண்டுகோள் அல்லது எமது தீர்மானத்திற்கேற்ப உங்களுக்கென ஒரு படிநிலை ஒதுக்கப்படலாம்.<br>• நீங்கள் ஒரு குறிப்பிட்ட படிநிலையில் தொடர்ந்து இருப்பதற்கு அல்லது அதன் சிறப்புரிமைகளை அனுபவிப்பதற்கான தகுதி நிபந்தனைகளைத் தீர்மானிக்கும் அல்லது மாற்றும் உரிமை எமக்குண்டு. | |
| **கூட்டுக் கணக்குகள்** | • பொருத்தமுள்ள கணக்கு மற்றும் சேவை தொடர்பான அல்லது விதிகள் மற்றும் நிபந்தனைகளின் கீழான கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களுக்கு நீங்கள் கூட்டாகவும் தனித்தனியாகவும் பொறுப்பாவீர்கள். | |
| **அறவீடுகள்** | பொருத்தமானவிடங்களில் காலத்திற்குக் காலம் சேவைக் கட்டணங்கள், வசதிக் கட்டணங்கள் அல்லது வேறேதும் அறவீடுகள் விதிக்கப்படலாம். கட்டணங்கள் மற்றும் அறவீடுகளின் விபரங்களை HSBC பிரிமியர் இணையத்தளத்திலும HSBC கிளைகளிலும் பெறக்கூடிய "Banking Tariff Guide for HSBC Retail Banking and Wealth Management Customers" என்ற பிரசுரத்தில் பார்க்கலாம். | |
| **மேலதிகப் பற்று பாதுகாப்பு** | • உங்கள் இலங்கை ரூபாய நடைமுறைக் கணக்கிற்கு, மேலதிகப் பற்று பாதுகாப்புக் கடன் வசதியொன்றறை ("OD Protection") நாம் வழங்கக்கூடும். இவ் வசதிக்கான உச்சவரம்பு மற்றும் வட்டி வீதத்தைத் தீர்மானிக்க அல்லது மாற்ற எமக்கு உரிமையுண்டு. | |
| **உங்கள் தகவல்களைப் பயன்படுத்துங்கள்** | • HSBC யும் HSBC குழுமத்தின் ஏனைய அங்கத்துவ நிறுவனங்களும் வாடிக்கையாளர் பற்றிய தகவல்களை (வாடிக்கையாளர், வாடிக்கையாளரின் கொடுக்கல் வாங்கல்கள், HSBC வசதிகள் மற்றும் சேவைகளை வாடிக்கையாளர் பயன்படுத்தும் முறை மற்றும் HSBC குழுமத்துடன் வாடிக்கையாளர் பேணும் உறவுகள் பற்றிய பொருத்தமான தகவல்களும் உள்ளடங்கும்) சேகரிக்கவும் பயன்படுத்தவும் பகிர்ந்துகொள்ளவும் முடியும். வாடிக்கையாளர் பற்றிய தகவல்கள் வாடிக்கையாளரிடத்திலிருந்து (அல்லது வாடிக்கையாளரின் சார்பில் செயற்படும் ஒருவரிடத்திலிருந்து) கோரப்படலாம், அல்லது HSBCஇனால் அல்லது HSBC குழும அங்கத்துவ நிறுவனம் ஒன்றினால் அல்லது அவற்றின் சார்பில் வேறேதும் இடத்திலிருந்து பகிரங்கமாகக் கிடைக்கும் தகவல்கள் உட்பட) சேகரிக்கப்படலாம், அல்லது HSBCக்கு அல்லது HSBC குழும அங்கத்துவ நிறுவனம் ஒன்றிற்குக் கிடைக்கும் தகவல்களுடன் இணைத்துப் பெறப்படலாம். | |
| **உங்கள் கணக்குகளில் பற்று வைக்க, எதிரீடு செய்ய எமக்குள்ள உரிமை** | உங்களுக்கு முன்னறிவித்தல் கொடுக்கமாமலே பின்வருவனவற்றைச் செய்ய எமக்கு உரிமையுண்டு:<br>• நீங்கள் எமக்குச் செலுத்த வேண்டிய ஏதேனும் தொகையை எம்முடன் நீங்கள் பேணும் கணக்கில் பற்று வைப்பதற்கு.<br>• நீங்கள் எமது வங்கியில் வைத்திருக்கும் ஏதேனும் அல்லது சகல கணக்குகளிலும் மீதியாகவிருக்கும் தொகைகளை இடைநிறுத்திவைக்க, ஒருங்கிணைக்க அல்லது ஒன்று திரட்டவும், அத்தகைய கணக்குகளில் வரவாகவுள்ள ஏதேனும் பணத்தை, உங்களால் எமக்குச் செலுத்தப்பட வேண்டியுள்ள ஏதேனும் உண்மையான அல்லது எதேச்சையான, தற்போதய அல்லது எதிர்கால பொறுப்புக்களை (அது தனியாக உங்களால் அல்லது இன்னுமொருவருடன் சேர்ந்து கூட்டாகச் செலுத்தப்பட வேண்டியதாக இருக்கலாம்) தீர்ப்பனவு செய்வதற்கான எதிரீடு செய்வதற்கு அல்லது மாற்றீடு செய்வதற்கு.<br>• எமது வங்கியில் நீங்கள் வைத்துள்ள ஏதேனும் அல்லது சகல கணக்குகளிலும் ஏதேனும் நாணயத்தில் மீதியாகவுள்ள தொகை, நீங்கள் எமக்குச் செலுத்த வேண்டிய தொகைக்குக் குறைவாக இருக்குமாயின், அக் கணக்குகளிலிருந்து உங்களுக்கு வருமதியாகவுள்ள அல்லது நீங்கள் கோரும் பணத்தை மீளளிக்க மறுப்பதற்கு. | |

# முக்கிய விதிகளின் சுருக்கம்*

HSBC Premier

## துரித தகவல்கள்

| முக்கிய விதிகள் | | மேலதிக தகவல்களுக்கு |
|---|---|---|
| சேவைகளின் அல்லது கணக்குகளின் முடிவுறுத்தல் | • நீங்கள் எழுத்துமூல முன்னறிவித்தல் கொடுத்துவிட்டு எமது சேவைகளை அல்லது உங்களின் ஏதேனும் கணக்குகளை முடிவுறுத்தல் செய்யலாம்.<br>• விதிகள் மற்றும் நிபந்தனைகளில் வேறு விதமாகக் குறித்துரைக்கப்படாவிடின், முன்னறிவித்தல் கொடுக்காமலே எமது சேவைகள் முழுவதையும் அல்லது அவற்றில் ஏதேனுமொரு பகுதியை முடிவுறுத்தல் செய்யவும் முன்னறிவித்தல் கொடுத்துவிட்டு உங்கள் கணக்குகளை முடிவுறுத்தல் செய்யவும் முடியும். | •ஒருங்கிணைந்த கணக்கு விதிகள் மற்றும் நிபந்தனைகள் (“T&Cs”) |
| விதிகள் மற்றும் நிபந்தனைகளின் மாற்றம் | • காலத்திற்குக் காலம் விதிகள் மற்றும் நிபந்தனைகளை மாற்றும் உரிமை எமக்கு உண்டு. இந்த மாற்றங்கள் எமது கட்டடங்களில் பார்வைக்கு வைக்கப்படும் அறிவித்தல்கள் அல்லது பொருத்தமான வேறேதும் வழியில் உங்களுக்கு அறிவிக்கப்படும். | |

# முக்கிய விதிகளின் சுருக்கம்*

## உங்கள் குரல்

உங்கள் அபிப்பிராயங்களை அல்லது முறைப்பாடுகளை எமக்குத் தெரிவிக்க விரும்பினால், தயவுசெய்து தொடர்புகொள்ளவும்.

**வாடிக்கையாளர் திருப்தி மற்றும் அபிப்பிராயம்**
நாம் வழங்கும் சேவைகள் குறித்து உங்களுக்குப் பூரண திருப்தி இல்லையெனின் அல்லது அச் சேவைகள் உங்கள் தேவையை ஈடுசெய்யவில்லையெனின், தயவுசெய்து இயன்றளவு விரைவாக பின்வரும் ஒரு வழியில் எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்:

+ 94 114 511 566 என்ற வாடிக்கையாளர் தீர்வுகள் உடனடித் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக
customersolutions@hsbc.com.lk என்ற மின்னஞ்சல் முகவரி ஊடாக
தபால் முகவரி: வாடிக்கையாளர் சேவை முகாமையாளர், நுகர்வு விநியோக மற்றும் செல்வ முகாமை,
HSBC நிலையம், 525, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.

நீங்கள் முன்வைக்கும் பிரச்சினைகளை உங்களுக்குத் திருப்தியளிக்கும் விதத்தில் தீர்த்துவைக்கவே நாம் எப்போதும் விரும்புகிறோம். எனினும், நீங்கள் நிதித்துறை ஆலாட்சி அதிகாரியின் அலுவலகத்துடன் தொடர்புகொண்டு உங்கள் பிரச்சினைக்கு நிவாரணம் கோரலாம். ஆலாட்சி அதிகாரியின் தொடர்பு விபரங்கள் பின்வருமாறு:

நிதித்துறை ஆலாட்சி அதிகாரியின் அலுவலகம் - இலங்கை, 143ஏ, வஜிரா வீதி, கொழும்பு 05.
தொலைபேசி: + 94 112 595 625
தொலைநகல்: + 94 112 595 624
மின்னஞ்சல்: info@financialombudsman.lk
இணையத்தளம்: www.financialombudsman.lk

மேலதிக விபரங்களுக்கு www.hsbc.lk என்ற எமது இணையத்தளத்தை நாடவும்.

* ஒருங்கிணைக்கப்பட்ட கணக்கிற்கு ஒருங்கிணைக்கப்பட்ட கணக்குகளுக்கான பூரண விதிகள் மற்றும் நிபந்தனைகளே செல்லுபடியாகும். இந்த அட்டவணையில் காணப்படுவது தகவலுக்காகத் தரப்பட்டுள்ள முக்கிய விதிகளின் சுருக்கம் மாத்திரமே. இதனை பூரண விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குப் பதிலானதாகக் கொள்ள முடியாது. ஏதேனும் முரண்பாடுகள் காணப்படும் பட்சத்தில் பூரண விதிகள் மற்றும் நிபந்தனைகளே மேலாதிக்கம் செலுத்தும்.